**வணக்கம்**

**ஆகாஷ்வாணி – புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் ரோஷ்னா காசிம்**

**தேதி : 06.09.2026 – நேரம் : மாலை 6.10 மணி**

---

**தலைப்புச் செய்திகள்**

நாட்டின் உள்கட்டமைப்பு, மேம்பாட்டுத் திட்டங்கள் மிக விரைவாக செயல்படுத்தப் படுவதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

கல்வி நிறுவனங்கள் மாணவர்களை சமூகத்திற்கான பொறுப்புள்ள குடிமக்களாக உருவாக்குவதில் கவனம் செலுத்த வேண்டும் என்று குடியரசுத் துணைத் தலைவர் திரு. சி. பி. ராதாகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார்.

புதுச்சேரி பல்கலைக்கழகம் சார்பாக சுற்றுலா மற்றும் தொழில் துறையை இணைப்பதற்கான சர்வதேச மாநாடு நாளை தொடங்கி வரும் வெள்ளிக்கிழமை வரை நடைபெற உள்ளது.

நேபாள பெருவெள்ளத்தில் அனல்மின் நிலையங்களில் சிக்கியவர்களை மீட்க இந்தியா-சீனா குழுக்கள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

---

பிரதமர் (19)

நாட்டின் உள்கட்டமைப்பு, மேம்பாட்டுத் திட்டங்கள் மிக விரைவாக செயல்படுத்தப் படுவதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். புதுடெல்லி ஶ்ரீராம் கல்லூரி நூற்றாண்டு விழாக் கொண்டாட்டங்களில் உரையாற்றிய அவர், ரயில்வே துறையை மின்மயமாக்கும் பணிகள், அதி விரைவாக நடைபெற்று வருவதாக கூறினார். அரசின் தெளிவான கொள்கை செயல் திட்டங்களால், தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்கள் நிறைவேற்றப்பட்டு, எண்ணற்ற இளையோருக்கு புதிய வாய்ப்புகள் ஏற்படுத்தப் பட்டுள்ளதாக தெரிவித்தார். இந்தியாவில் தயாரிப்போம் திட்டத்தால், இறக்குமதி நாடு என்ற நிலையைத் தாண்டி, அதிக

அளவிலான ஏற்றுமதி செய்யும் நாடாக இந்தியா முன்னேறி உள்ளதாக சுட்டிக் காட்டிய பிரதமர், தற்போது, இரண்டரை லட்சம் கோடி ரூபாய் அளவிற்கு, ஸ்மார்ட் ஃபோன் ஏற்றுமதி நடைபெறுவதை எடுத்துரைத்தார். 2014ஆம் ஆண்டு, 700 கோடி ரூபாயாக இருந்த பாதுகாப்பு தளவாட ஏற்றுமதி, தற்போது 40 ஆயிரம் கோடி ரூபாய் அளவை எட்டி உள்ளதாக, கூறினார். சிறிய, எளிய இலக்குகளைத் தாண்டி, தேச வளர்ச்சிக்கான மிகப் பெரிய சாதனைகளை தமது அரசு எட்டி வருவதாக கூறிய பிரதமர், மேற்காசிய சூழல், உலகளாவிய வர்த்தக தேக்க நிலையின் போதும், இந்தியாவின் காலாண்டு பொருளாதார வளர்ச்சி, 7.8 சதவிகிதமாக உள்ளதாக, பெருமிதம் தெரிவித்தார்.

---------------------

## குடியரசுத் துணைத் தலைவர் 1 (5)

கல்வி நிறுவனங்கள் மாணவர்களை வேலைவாய்ப்புகளுக்குத் தயார்படுத்துவதையும் தாண்டி, ஜனநாயகம் மற்றும் சமூகத்திற்கான பொறுப்புள்ள குடிமக்களை உருவாக்குவதில் கவனம் செலுத்த வேண்டும் என்று துணை ஜனாதிபதி சி. பி. ராதாகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார். அவரது உரை குறித்த கூடுதல் தகவல்கள்.....

(வாய்ஸ்)

## குடியரசுத் துணைத் தலைவர் 2 (18)

(வாய்ஸ்)

இன்று குவஹாத்தியில் உள்ள கீதாநகர் கல்லூரியின் பொன்விழாக் கொண்டாட்டத்தில் உரையாற்றிய குடியரசுத் துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், நாட்டின் முன்னேற்றத்திற்கு தரமான கல்வி, ஆராய்ச்சி மற்றும் குணநலன்களை வளர்த்தல் ஆகியவை அவசியம் என்று கூறினார். உயர்கல்வியில் பெண்களின் வளர்ந்து வரும் சாதனைகளை துணை ஜனாதிபதி எடுத்துரைத்து, அதனை ஒரு வரவேற்கத்தக்க மாற்றம் என்றும் நாரி சக்தியின் பிரதிபலிப்பு என்றும் விவரித்தார். பெண்களுக்கு சரியான கல்வியையும் வாய்ப்புகளையும் வழங்குவது, அவர்கள் தங்கள் சொந்தக் காலில் நிற்க உதவுகிறது என்றும், அதுவே உண்மையான அதிகாரமளித்தல் என்றும் அவர் குறிப்பிட்டார். அசாமின் வளர்ச்சிப் பாதையைக் குறிப்பிட்ட திரு. ராதாகிருஷ்ணன், கடந்த ஐந்து ஆண்டுகளில் அசாமின் பொருளாதாரம் 45%

வளர்ச்சியடைந்துள்ளதாகவும், 2021-22 முதல் 2024-25 வரை தனிநபர் வருமானம் 54% உயர்ந்துள்ளதாகவும் கூறினார். 2047-ஆம் ஆண்டுக்குள் விக்ஸித் பாரத் என்ற பிரதமரின் தொலைநோக்குப் பார்வையை வலியுறுத்திய துணை குடியரசுத் தலைவர், இந்த இலக்கை அடைவதற்கு ஒவ்வொரு மாநிலம் மற்றும் பிராந்தியத்தின், குறிப்பாக வடகிழக்கின், அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி அவசியம் என்று கூறினார்.

---------------------

## கீர்த்தி வர்தன்சிங் (10)

இந்தியா, சவுதி அரேபியா இடையே மனிதவளம், திறன் மேம்பாடு, பருவநிலை மாற்ற செயல்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் பரஸ்பர ஒத்துழைப்பு வலுப்படுத்தப்படும் என மத்திய வெளியுறவுத்துறை இணை அமைச்சர் திரு. கீர்த்தி வர்த்தன் சிங் தெரிவித்துள்ளார். நான்கு நாள் அரசு முறைப் பயணமாக சவுதி அரேபியா சென்றுள்ள அவர், இரு நாடுகளுக்கிடையே ஆக்கப்பூர்வமான முக்கிய பேச்சுவார்த்தைகள் இந்த பயணத்தின்போது மேற்கொள்ளப்படும் என்றார். சவுதி அரேபியாவில் பணிபுரியும் இந்திய தொழிலாளர்களின் நலன்களை பேணி காக்க மத்திய அரசு உறுதிபூண்டுள்ள நிலையில், அங்கு பணியாற்றும் இந்திய தொழிலாளர்களுடனும் அமைச்சர் கலந்துரையாடுகிறார்.

---------------------

## பிரிக்ஸ் (11)

பிரிக்ஸ் உச்சிமாநாட்டின் முன்னோடியாக புதுதில்லியில் வரும் 12, 13 ஆம் தேதிகளில் பிரிக்ஸ் தொடக்க மாநாடு நடைபெறும் என மத்திய அரசு தெரிவித்துள்ளது. 500க்கும் மேற்பட்ட முதலீட்டாளர்கள், உறுப்பு நாடுகளை சேர்ந்த நிதியமைச்சர்கள், வர்த்தக தலைவர்கள் பங்கேற்கும் இந்த இரண்டு நாள் மாநாட்டில் முதலீட்டிற்கான வங்கி கட்டமைப்பு, ஒருங்கிணைப்பு, மின்னனு திறன், எரிசக்தி திட்டங்களை ஒருங்கிணைப்பது குறித்து விவாதிக்கப்படும். பிரிக்ஸ் நாடுகளின் பொருளாதார முறைகளில் எல்லை தாண்டிய முதலீடு, டாலர் முறை அல்லாத பண பரிவர்த்தனை குறித்தும் முக்கியமாக ஆலோசிக்கப்படுகிறது. இந்தியா தலைமையில் 18ஆவது பிரிக்ஸ்

உச்சிமாநாடு நடைபெறும் நிலையில் இந்த ஆலோசனைக்கூட்டம் முக்கியத்துவம் பெறுகிறது.

---------------------

## நேபாளம் (20)

நேபாள பெருவெள்ளத்தில் அனல்மின் நிலையங்களில் சிக்கியவர்களை மீட்க இந்தியா-சீனா குழுக்கள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். நேபாளத்தில் உள்ள ஆறுகளில் வெள்ளப்பெருக்கு நிலைமையை அந்நாட்டு நிர்வாகம் கண்காணித்து வருகிறது. நேபாளத்தில் கடந்த மாதம் 26-ம் தேதி ஏற்பட்ட பெருவெள்ளத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை ஆயிரத்து 344 ஆக அதிகரித்துள்ளது. காணாமல் போன ஐந்தாயிரத்துக்கும் மேற்பட்டோரை தேடும் பணியில் மீட்புப் படையினர் ஈடுபட்டுள்ளனர். இதுவரை 13 ஆயிரத்து 100-க்கும் மேற்பட்டோர் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர். அடையாளம் தெரியாத 453 பேரின் டிஎன்ஏ மாதிரிகள் நேபாள காவல்துறையினர் பரிசோதனைக்காக சேமித்து வைத்துள்ளனர். மேலும், ஆயிரத்து 270 சடலங்கள் குறித்த விவரங்கள் நேபாள காவல்துறையின் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. நேபாள பெருவெள்ளத்தின் மீட்பு பணி மற்றும் நிவாரணப் பணிகளுக்காக 7 ஆயிரத்து 912 காவல்துறையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

நேபாள பெருவெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு செல்லும் ஊடகவியலாளர்கள், அரசு பாதுகாப்பு நெறிமுறைகளைப் பின்பற்ற வேண்டுமென்று நேபாள அரசு அறிவுறுத்தியுள்ளது. இது தொடர்பாக நேபாள தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் ஊடகவியலாளர்களின் பாதுகாப்புக்காக இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது.

---------------------

## உலக வரைபடம் (21)

சம பரப்பளவு உலக வரைபடம் தொடர்பான ஐ.நா பொதுச் சபையின் தீர்மானத்திற்கு வெளியுறவு அமைச்சகம் பதிலளித்துள்ளது. சம பரப்பளவு வரைபடவியல் பிரதிநிதித்துவம் குறித்த ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் தீர்மானத்திற்கு இந்தியா ஆதரவாக வாக்களித்துள்ளது என்று வெளியுறவு அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் திரு. ரந்தீர் ஜெயஸ்வால் கூறினார். ஜம்மு காஷ்மீர் மற்றும் லடாக் யூனியன் பிரதேசங்கள் உள்ளிட்ட இந்தியாவின் இறையாண்மைக்குட்பட்ட

நிலப்பரப்பு, இந்தியாவின் அதிகாரப்பூர்வ வரைபடத்தின்படியே சித்தரிக்கப்பட வேண்டும் என்று திரு. ஜெயஸ்வால் மேலும் கூறினார். தவறான அல்லது தவறாக வழிநடத்தும் எந்தவொரு சித்தரிப்பும் ஏற்றுக்கொள்ள முடியாதது என்றும் அவர் தெளிவுபடுத்தினார். இந்தியாவின் இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாடு குறித்த அரசாங்கத்தின் நிலைப்பாடு தெளிவானது, நிலையானது மற்றும் சமரசத்திற்கு உட்படாதது என்றும் அவர் கூறினார். இந்த மாதம் 4ஆம் தேதி, ஐ.நா பொதுச் சபை, “வரைபடத்தைச் சரிசெய்தல், உலகளாவிய வரைபடப் பிரதிநிதித்துவத்தை மறுசீரமைத்தல் மற்றும் உலகின் பிராந்தியங்கள், குறிப்பாக ஆப்பிரிக்காவின் சமமான பிரதிநிதித்துவத்தை ஊக்குவித்தல்” என்ற தலைப்பில் ஒரு தீர்மானத்தை ஏற்றுக்கொண்டதாக திரு ஜெயஸ்வால் கூறினார். கண்டங்களின் நிலப்பரப்புகளின் ஒப்பீட்டு அளவுகளைப் பாதுகாக்கும் சம-பரப்பு வரைபட வீழல்களின் பயன்பாட்டை ஊக்குவிப்பதே இதன் நோக்கம் என்றும் அவர் கூறினார்.

---------------------

## புதுச்சேரி பல்கலைக்கழகம் 1 (3)

புதுச்சேரி பல்கலைக்கழகம் சார்பாக சுற்றுலா மற்றும் தொழில் துறையை இணைப்பதற்கான சர்வதேச மாநாடு நாளை தொடங்கி வரும் வெள்ளிக்கிழமை வரை நடைபெற உள்ளது. இதுகுறித்து கூடுதல் தகவல்......

(வாய்ஸ்)

## புதுச்சேரி பல்கலைக்கழகம் 2 (14)

(வாய்ஸ்)

Latvia நாட்டை சேர்ந்த Vidzeme பல்கலைக்கழகம், போர்ச்சுகல் நாட்டை சேர்ந்த De Setubal கல்வி நிறுவனம், புதுச்சேரி பல்கலைக்கழகம், ஹைதராபாத் டாக்டர் YSR சுற்றுலா கல்வி கழகம் இணைந்து இந்த மாநாட்டுக்கு ஏற்பாடு செய்துள்ளது. புதுச்சேரி பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பிரகாஷ் பாபு தலைமையில் நடைபெறும் நிகழ்ச்சியில், கர்நாடக மத்திய பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் Battu Sathyanarayana, புதுச்சேரி உயர்கல்வித்துறை செயலர் ஸ்ரீ முகமத் அபீத் உள்ளிட்டோர் உரையாற்றுகின்றனர். இந்நிகழ்ச்சியில், ஆசிரியர்கள், தங்களின் ஆராய்ச்சி வெளியீட்டின் விளக்கங்களை, வரும்

9ஆம் தேதியன்று வழங்க உள்ளனர். மேலும், வரும் 8ஆம் தேதியன்று, புதுச்சேரியில் உள்ள தனியார் ஓட்டலில், பங்குதாரர் சந்திப்பு மற்றும், தொகுதிகளின் விளக்கக் காட்சிகள் நடைபெறும். நாட்டின் வளமான, பாரம்பரிய மற்றும் மரபுகளை வெளிப்படுத்தும் வகையில், நகரின் பல இடங்களில், கலாச்சார நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளன.

---------------------

## மருந்து ஆணையம் (11)

மருந்து ஒழுங்குமுறை ஆணையம் புதுதில்லியில், பல்வேறு இடங்களில் சட்டவிரோதமாக விற்பனை செய்யும் மருந்தகங்களில் சோதனை மேற்கொண்டுள்ளது. மத்திய மருந்துகள் தரகட்டுப்பாட்டு அமைப்பு தில்லி காவல்துறை ஒருங்கிணைந்து பல்வேறு இடங்களில் சோதனை நடத்தியதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. அரசு சான்றிதழ் பெறாமல் செயல்படும் மருந்தகங்களின் மீது நடவடிக்கை எடுக்கும் வகையில் இந்த சோதனை மேற்கொள்ளப்பட்டது. பல்வேறு மருத்துவமனைகளில் அங்கீகாரம் இல்லாத நோய் தடுப்பு மருந்துகள் பயன்படுத்துவதை கண்டறிந்துள்ள நிலையில், அரசு அங்கீகாரம் பெற்ற மருந்தகங்களிலிருந்து மருந்துகள் வாங்க வேண்டும் என்று மருத்துவமனைகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

---------------------

## குழந்தை திருமண எதிர்ப்பு (6)

சர்வதேச குழந்தை திருமண எதிர்ப்பு நாள் ஐ.நா. சார்பில் நவம்பர் 27 ஆம் தேதி கடைப்பிடிப்பதற்கான தீர்மானத்திற்கு இந்தியா ஆதரவு அளித்துள்ளது. ஐ.நா. பொதுச்சபையில் நடைபெற்ற வாக்கெடுப்பில் ஒருமித்த கருத்துடன் இது தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. Sierra Leone நாடு கொண்டு வந்துள்ள இந்த தீர்மானத்துக்கு இந்தியா உட்பட பல்வேறு நாடுகள் ஆதரவு அளித்துள்ளன.

---------------------

## ஹோர்முஸ் நீரிணை (10)

ஹோர்முஸ் நீரிணை வழியாக சென்ற 3 எண்ணெய் கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தியதாக ஈரான் தெரிவித்துள்ளது. அமெரிக்கா நாட்டுடன் இணைந்த எண்ணெய் நிறுவனங்களின் இந்த கப்பல்கள் மீது ஏவுகணை தாக்குதல் நடத்தியதாக ஈரான் ராணுவம் கூறியுள்ளது. ஓமன்

கடற்பகுதியில் ஈரானின் 3 எண்ணெய் கப்பல்கள் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தியதற்கு பதிலடியாக இந்த தாக்குதல் நடத்தப்பட்டது. ஹோர்முஸ் நீரிணை வழியாக செல்லும் அனைத்து கப்பல்களுக்கும் ஈரான் எச்சரிக்கை விடுத்துள்ளது. முன்னதாக, ஈரான் கப்பல்கள் மீது அமெரிக்கா நடத்திய தாக்குதல்களுக்கு ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சகம் கண்டனம் தெரிவித்துள்ளது.

---------------------

## பேட்மிண்டன் (10)

பேட்மிண்டனில், இந்தியாவின் சத்விக்சாய்ராஜ் ரங்கிரெட்டி மற்றும் சிராக் ஷெட்டி மூன்றாவது முறையாக சைனா மாஸ்டர்ஸ் இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளனர். உலகத் தரவரிசையில் 5-வது இடத்தில் உள்ள இந்த ஜோடி, அரையிறுதிப் போட்டியில் மலேசியாவின் நூர் முகமது அஸ்ரின் அயூப் மற்றும் டான் வீ கியோங் ஜோடியை 21-15, 18-21, 21-11 என்ற புள்ளிக்கணக்கில் தோற்கடித்தது. ஆசிய விளையாட்டுப் போட்டிகளின் சாம்பியன்களான இவர்கள், இந்த சீசனில் தங்களின் இரண்டாவது பட்டத்தை வெல்லும் நோக்கில், இன்று இந்திய நேரப்படி பிற்பகல் 1:50 மணிக்கு கோர்ட் 1-ல் நடைபெறும் இறுதிப் போட்டியில் சீனாவின் ஹெ ஜி டிங் மற்றும் ரென் சியாங் யூ ஜோடியை எதிர்கொள்கின்றனர்.

---------------------

**மீண்டும் தலைப்புச் செய்திகள்**

நாட்டின் உள்கட்டமைப்பு, மேம்பாட்டுத் திட்டங்கள் மிக விரைவாக செயல்படுத்தப் படுவதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

கல்வி நிறுவனங்கள் மாணவர்களை சமூகத்திற்கான பொறுப்புள்ள குடிமக்களாக உருவாக்குவதில் கவனம் செலுத்த வேண்டும் என்று குடியரசுத் துணைத் தலைவர் திரு. சி. பி. ராதாகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார்.

புதுச்சேரி பல்கலைக்கழகம் சார்பாக சுற்றுலா மற்றும் தொழில் துறையை இணைப்பதற்கான சர்வதேச மாநாடு நாளை தொடங்கி வரும் வெள்ளிக்கிழமை வரை நடைபெற உள்ளது.

நேபாள பெருவெள்ளத்தில் அனல்மின் நிலையங்களில் சிக்கியவர்களை மீட்க இந்தியா-சீனா குழுக்கள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.